(ஈ) கோவையில் மூடிக்கிடக்கும் ஆலைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவையில் மூடிக்கிடக்கும் ஆலைகள் குறித்து திரு. சாதிக்பாட்சா அவர்களும், திரு. க. சுப்பு அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்றனர். இருவருமே இது இப்போது ஏற்பட்ட நிகழ்ச்சி அல்ல என்றும், வெகுநாட்களாக நடைபெறும் நிகழ்ச்சி என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். மேலும் அவர்கள் ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் இப்பொருள் குறித்துப் பேச வாய்ப்பு இருக்கிறது. எனவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை அவையில் எழுப்ப எனது அனுமதியை மறுக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : எல்லா விஷயங்களையுமே ஆளுநர் அவர்களது உரையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை அடிப்படையாக வைத்து இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களையெல்லாம் மறுத்து விடுவது நலமாக இருக்காது என்ற எனது கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றையும் மறுத்து விடவில்லை. எது எது அவசரமும் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்தது என்று அவைத் தலைவர் கருதுகிறார்களோ அதை அனுமதித்திருக்கிறோம். மற்றவைகள் பொது பிரச்னையாக, ஸ்பெஸிபிக்காக இது இது என்று குறிப்பிட்டு காட்டாத வகையில் இருப்பதைத் தான் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசலாம் என்று சொல்லியிருக்கிறேனே தவிர, அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்றால் கட்டாயம் இந்த அவையில் கொண்டு வந்து விவாதிக்க அனுமதி தரப்படும்.

திரு. துரை முருகன் : தமிழ் நாட்டில் கல்லூரிகள் மூடப்படுவது பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். தமிழ் நாட்டில் பள்ளிக்கூடங்கள் மூடுகிறது என்பது அத்தியாவசியமான பிரச்னை அல்லவா ? அதுபற்றி விவாதிக்க வேண்டாமா ? தெரிந்து கொள்ளலாம் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட காலமாக இங்கு இருக்கிறார்கள். இந்தக் கல்லூரியில் இந்த வேலை நிறுத்தம், இந்தத் தவறு நடக்கிறது என்று சொல்லியிருந்தால் அதைக் குறிப்பிட்டு இங்கே பேசுவது நியாயம். பரவலாக மொத்தத்தில் எங்கே, என்ன, என்று குறிப்பிடாமல் கொடுத்திருப்பதைப் பற்றி இந்த அவையில் ஆளுநர் அவர்களது உரையின் மீதான விவாதத்தில் பேசலாம் என்பதுதான் என் கருத்து.